1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தல்

1.6.1 முற்பணக் கொடுப்பனவுகள்

(அ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது திணைக்களத்தினை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட உள்ள, 1 தொடக்கம் 3 வருட காலப்பகுதி நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர் கடன் ஷரூ. 303,061 தொகையினை தாபன விதிக் கோவையின் ஓஓஐஐ ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பதவியினை விட்டு விலகிச் சென்றிருந்த நான்கு உத்தியோகத்தர்களுக்கு ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மிகையாகச் செலுத்தி இருந்த மொத்தம் ஷரூ. 189,535 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

1.6.2 கட்டுநிதிக் கணக்கு இணக்கக் கூற்றின் மீதி

(அ) திறைசேரி கணினி அச்சுக் குறிப்புக்களுக்கு அமைய, ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடல் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ஷரூ. 59,195,935 தொகை மற்றும் ஏற்கப்பட்ட செலவுகள் ஷரூ. 2,708,221 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், மேற்படி மீதிகள் கட்டுநிதிச் சீராக்கல் கூற்றில் முறையே ஷரூ. 42,932,026 தொகை மற்றும் ஷரூ. 2,182,012 தொகை என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்தன.

(ஆ).2023 நவெம்பர் 30 ஆம் திகதிய மற்றும் 2023.∙.05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கூற்றுடன் சீராக்கல் செய்யப்படக் கூடாத வைப்புக் கணக்கு (குறுக்குப் பதிவுகள்) வருமானங்கள் ஷரூ. 8,859,698 தொகை, கொடுப்பனவுகள் ஷரூ. 1,014,366 தொகை மற்றும் அறிக்கையிடல் நிறுவனத்தினால் காசோலைகளை செல்லுபடியற்றதாக்கிய செலவின விடயங்களின் மிகை ஊதியம் ஷரூ. 316,520 தொகையும் கட்டுநிதிச் சீராக்கல் கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

1.6.3 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதி அல்லாத சொத்துக்களின் வகைப்படுத்தல் அட்டவணையில் ஜேர்னல் இலக்கத்துடன் சொத்துக்களின் பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அதற்கு உரிய சொத்துப் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்காமை காரணமாக சொத்து வகையினை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் இருந்தது.

(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்திய பொறியியலாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையினை ஒப்படைக்கும் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்று இருந்த போதிலும் அவற்றை மதிப்பீடு செய்து மேற்படி பெறுமதிகளை நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(இ) சிலாபம் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் பேணி வரப்படும் பிரதேச செயலகத்திற்கு உரித்தான கட்டிடத்தின் உரித்தினை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ளாது 2022 ஆம் ஆண்டில் ஷரூ. 2,800,000 தொகைக்கு மதிப்பீடு செய்து கணக்கில் சேர்த்து வைத்த தவறினை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் கணக்குகளில் சீர் செய்யும் போது அலுவலகக் கட்டிடத்தின் ஆரம்ப மீதியினை சீர் செய்வதற்குப் பதிலாக சொத்துக்களை நீக்குதல் என்ற வகையில் சீராக்கல் செய்யப்பட்டு இருந்ததுடன் மேற்படி சொத்தின் உரித்தினை திணைக்களத்திடம் ஒப்படைக்கும் வரைக்கும் அதனை சிலாபம் பிரதேச செயலக கணக்குகளில் உள்ளடக்குவதற்காக அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் சிலாபம் பிரதேச செயலகம் என்பவற்றிற்கு அறியத்தருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் ஷரூ. 42,007,000 தொகைக்கு மதிப்பீடு செய்து குறிப்பிடப்பட்டு உள்ள 0.7491 ஹெக்ரயார் அளவிலான 03 காணிகளின் உரித்தினை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(எ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் திணைக்களத்திற்கு உரித்தான 17 மோட்டார் சைக்கிள்களுள் 08 மோட்டார் சைக்கிள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனம் ஒன்றின் மூலம் 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அதனுள் உள்ளடக்கப்பட்டு இருந்தன. மேலும் கொடவாய விடுமுறை விடுதியின் மோட்டார் சைக்கிள் ஒன்று ஷரூ. 15,000 தொகை என்ற வகையிலும் மற்றும் ஷரூ. 40,000 தொகை என்ற வகையிலும் இரண்டு முறை வாகனங்கள் தொடர்பான அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு உள்ளதனையும் அவதானிக்க முடிந்தது.

(ஏ) பிரதான அலுவலகம், பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் மற்றும் விடுமுறை விடுதிகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த 11 வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சிறிய குறைபாடான நிலைமைகளின் காரணமாக கிட்டத்தட்ட 02 வருட காலமாக ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி வாகனங்களைப் பழுதுபார்த்து ஓடும் நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது ஓடுவதற்குப் பொருத்தமானது அல்ல எனின் கழித்து ஒதுக்கும் செயற்பாட்டிற்காக அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது உரிய வளாகங்களில் நிறுத்தி வைத்து உக்கிப் போவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது.

(ஐ) கருத்திட்டச் செயற்பாடுகளுக்காக மொரட்டுவ மற்றும் நீர்கொழும்பு பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு உள்ள நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்குகளில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

06 ஆம் திகதி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அதனுள் உள்ளடக்கப்பட்டு இருந்தன. மேலும் கொடவாய விடுமுறை விடுதியின் மோட்டார் சைக்கிள் ஒன்று ஷரூ. 15,000 தொகை என்ற வகையிலும் மற்றும் ஷரூ. 40,000 தொகை என்ற வகையிலும் இரண்டு முறை வாகனங்கள் தொடர்பான அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு உள்ளதனையும் அவதானிக்க முடிந்தது.

(ஏ) பிரதான அலுவலகம், பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் மற்றும் விடுமுறை விடுதிகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த 11 வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சிறிய குறைபாடான நிலைமைகளின் காரணமாக கிட்டத்தட்ட 02 வருட காலமாக ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி வாகனங்களைப் பழுதுபார்த்து ஓடும் நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது ஓடுவதற்குப் பொருத்தமானது அல்ல எனின் கழித்து ஒதுக்கும் செயற்பாட்டிற்காக அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது உரிய வளாகங்களில் நிறுத்தி வைத்து உக்கிப் போவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது.

(ஐ) கருத்திட்டச் செயற்பாடுகளுக்காக மொரட்டுவ மற்றும் நீர்கொழும்பு பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு உள்ள நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்குகளில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

லங்கா மினரல் சேன்ட் லிமிடட் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 செப்தெம்பர் 03 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட 04 அனுமதிப்பத்திரங்களுக்கு மற்றும் 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதியில் இருந்து 2021 செப்தெம்பர் 06 வரையான காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் மேற்படி நிறுவனத்தினால் அனுமதிக்கபட்ட மணல் கியூப் அளவினைத் தாண்டி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளுக்காக அறவிடப்பட வேண்டிய முறையே ஷரூ. 72,895,000 தொகை மற்றும் ஷரூ. 1,688,555 தொகை கட்டணத்தினை அறவிட்டுக் கொள்வதற்குத் தவறி இருந்தது. எனினும் லங்கா மினரல் சேண்ட் லிமிட்ட் நிறுவனத்தினால் ஷரூ. 64,056,000 தொகை மாத்திரம் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாகக் கணிப்பிட்டு மேற்படி தொகையினை 05 ஆண்டுகளுக்குள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவித்து இருந்தமை கணக்காய்விற்கு சிக்கலை ஏற்படுத்தியது.

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு முன்வருதல்

2017 ஏப்பிரல் 27 ஆம் திகதிய மற்றும் 255⁄.2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபம் மற்றும் நிதி ஒழுங்குவிதி 94 (1) இன் பிராகரம் ஒதுக்கீட்டினைத் தாண்டி பொறுப்புக்களுக்கு முன்வருதல் கூடாது எனினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலவின விடயங்கள் 04 இற்காக ஷரூ. 10,948 தொகை ஆகிய மீதியினைத் தாண்டி ஷரூ. 5,582,213 தொகை பொறுப்புக்களுக்கு முன்வந்து இருந்தன.

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ∴ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுறுதியுடைய உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் பயனுறுதி தொடர்பில் அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை பயனுறுதியுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் எனினும், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி மீளாய்வுகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் “2022.08.08 ஆம் திகதிய மற்றும் DMA - 02/2022 (i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றுநிருபத்திற்கு அமைய அது செல்லுபடியற்றதாக்கப்பட்டு இருப்பதாக அறிவித்து” உறுதிப்படுத்தாமல் மீள அனுப்பப்பட்டு இருந்தது.

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசையாமை

	சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான முன்னளிப்பு	ஒத்திசையாமை
(அ)	நிதி ஒழுங்குவிதி 214	தேவையான விரிவான தகவல்களை உள்ளடக்கி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஆவணம் ஒன்றினைப் பேணி வந்திருக்கவில்லை.
(அ)	2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 இற்கு உரிய வகையில் 2020 மார்ச் 25 ஆம் திகதிய மற்றும் 35 ஆம் இலக்கக் குறைநிரப்பி	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் முறையே ஷரூ.மி. 17 தொகை மற்றும் ஷரூ.மி. 18 தொகை ஆகிய மொரட்டுவை லூனாவ கடற்கரையோரத்தில் கரையோர அரிப்பினைத் தடுப்பதற்காக 410 மீற்றர் நீளமான ரிவெட்மெண்ட் அணைக்கட்டு மற்றும் களுத்துறைக் கடற்கரையோரத்தின் 200 மீற்றர் நீளமான ரிவெட்மெண்ட் அணைக்கட்டின் படிமுறை ஐ இனை நிர்மாணிப்பதற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் கருங்கல் ஆகியவற்றை சந்தை விலைக் கணக்கு இணக்க முறையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் அமைச்சின் பெறுகைகள் குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 2022 ஒக்டோபர் மாதம் மற்றும் 2021 யூன் மாதம் விலை மனு கோரப்பட்டு அது திணைக்களப் பெறுகைகள் குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு இருந்தது.
(ஆ)	016 டிசம்பர் 29 ஆம் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் முறையே ஷரூ.மி. 17 தொகை மற்றும் ஷரூ.மி. 18 தொகை ஆகிய மொரட்டுவை லூனாவ கடற்கரையோரத்தில் கரையோர அரிப்பினைத் தடுப்பதற்காக 410 மீற்றர் நீளமான ரிவெட்மெண்ட் அணைக்கட்டு மற்றும் களுத்துறைக் கடற்கரையோரத்தின் 200 மீற்றர் நீளமான ரிவெட்மெண்ட் அணைக்கட்டின் படிமுறை ஐ இனை நிர்மாணிப்பதற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் கருங்கல் ஆகியவற்றை சந்தை விலைக் கணக்கு இணக்க முறையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் அமைச்சின் பெறுகைகள் குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 2022 ஒக்டோபர் மாதம் மற்றும் 2021 யூன் மாதம் விலை மனு கோரப்பட்டு அது திணைக்களப் பெறுகைகள் குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

(இ)	2016 டிசம்பர் 29 ஆம் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி	ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்கும் பின்னர் 12 மாத காலப்பகுதிக்குப் பின்னர் அல்லது 25000 கி.மீ. தூர அளவு ஓட்டத்தில் ஈடுபடுத்தியதன் பின்னர் என்ஜினுடன் தொடர்புடைய பழுதுபார்த்தல் ஒன்றின் பின்னர் அல்லது ஆகிய விடயங்களுள் முதலில் வரும் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிட்சிப்பு ஒன்றினை மேற்கொள்ளல் வேண்டும் எனினும் திணைக்களத்தின் 28 வாகனங்கள் மற்றும் 18 இயந்திரங்கள் தொடர்பில் அவ்வாறு எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.
(ஈ)	2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய மற்றும் 01.∴2021 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றுநிருபத்தின் 09 மற்றும் 10 ஆம் பந்திகள்	இணைந்த சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சாரதிகள், அலுவலகப் பணியாளர் சேவை உத்தியோகத்தர்கள் 90 பேருக்கு வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் மூலம் இந்தத் திணைக்களத்தில் 05 வருடம் தொடக்கம் 15 வருடங்களுக்கும் மேலாக நீண்ட காலம் ஒன்றும், அதில் 37 பேர் 15 வருடங்களுக்கும் மேலான காலம் ஒன்றும் கடமைகளை நிறைவேற்றி வந்து இருந்தனர்.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

(அ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் 7 (உ) மற்றும் 12 ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட ஆலோசகர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கரையோர முகாமைத்துவத் திட்டத்தின் 6.4.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஆலோசகர் சபைக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் ஒன்றும் பொது நடவடிக்கைகளுக்காக அன்றி பின்னடைவுப் பிரதேசத்தில் இருந்து விடுவிப்புப் பெற்று தனிப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் ஒன்றும் காணப்படுவதில்லை என்பதுடன் அபிவிருத்திப் பணிக்காக வேறு மாற்றுவழி ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் நிர்மாணிப்புக்கள் அற்ற பிரதேசம் ஒன்றாகிய “ஒதுக்கப்பட்ட பிரதேசம்” பொதுமக்களின் பிரத்தியேகம் அல்லாத பொது அபிவிருத்திப் பணிகளுக்காக மாத்திரம் கரையோரப் பின்னடைவுப் பிரதேசத்தில் இருந்து விடுவித்தலை அனுமதித்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் மேற்கொள்ள முடிந்தது. அவ்வாறெனினும் 2021 டிசம்பர் முதல் 2023 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்ட ஆலோசகர் சபைக் கூட்டத் தொடர்களில் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் 81 பிரத்தியேக விண்ணப்பங்களுக்கு நிர்மாணிப்புக்களுக்காக எதிர்ப்பு ஏதும் இல்லை என கடிதங்களுடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தமையினால் அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கரையோர வலயத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் ஏற்படும் பாதிப்பான விளைவுகளைத் தடுத்தல் அல்லது குறைத்தல் எனும் நோக்கத்திற்கு ஒத்தியங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட முடிவு மட்டத்தினைப் பெற்று இருக்காமை

(அ) மொரட்டுவை லுனாவ கடல் அரிப்பினைத் தடுக்கும் பொருட்டு கிட்டத்தட்ட 100 மீற்றர் நீளத்திற்கு நிர்மாணிக்கப்பட்டு இருந்த ரிவெட்மெண்ட் அணைக்கட்டினை 300 மீற்றர் வரை நீட்டிப்பதற்காக தேவையான இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஷரூ. 24,999,825 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஆண்டின் இறுதியில் அணைக்கட்டினை 410 மீற்றர் வரை நீட்டித்து மதிப்பீட்டினை ஷரூ. 36,287,012 வரை அதிகரித்து இருந்ததுடன் இந்த அணைக்கட்டினை நீட்டிக்கும் தேவைப்பாடு தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. கரையோரத்தை அண்டிய 38 வீடுகள் தொடர்பில் நிலவிய சிக்கலான நிலைமையினை தீர்த்துக் கொள்ளாமை, ஷரூ. 3,567,321 தொகைப் பணம் செலுத்தி தேவையான மூலப்பொருட்களைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட புகையிரதக் கடவையில் உரிய முறையில் கொடி ஏந்தியவர்களை ஈடுபடுத்தாமை மற்றும் பொருட்களின் விநியோகம் தாமதமாதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 2021 நவெம்பர் 11 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் சென்றமையினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு நிறைவடையும் போது மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ஷரூ. 65,919,292 தொகை வரை அதிகரித்து இருந்தது.

(ஆ) 2012 முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட 2763 அத்துமீறிய நிர்மாணிப்புக்களுள், 2445 அத்துமீறிய நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்கும், 12 மாவட்டங்களில் அத்துமீறிய நிர்மாணிப்புக்களாக அடையாளம் கண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருந்த மொத்த அத்துமீறிய நிர்மாணிப்புக்கள் 566 இல் 340 இற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(இ) நிகழ்நிலை முறையின் ஊடாக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2019 பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதிலும் மேற்படி முறைமையில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை, முறைமைக்குப் புறம்பான வகையில் கையினால் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், இடம் சார்ந்த பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் சென்றிருந்தமை, தீர்மானங்களை மேற்கொள்ளும் போது கடல் பரப்பு எல்லை மற்றும் நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படும் தூரம் என்பவற்றை நிகழ்நிலைத் தகவல்கள் முறைமையின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளமை ஆகிய விடயங்களுக்கு அமைய முறைமையினை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான காலம் குறைவடைதல் எனும் நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை. மேலும் நிகழ்நிலை முறைமையில் உள்ளடக்கப்பட்டு உள்ள தகவல்கள் மேற்படி முறைமையின் ஆக்குநரிடம் காணப்படுவதன் காரணமாக தரவுகளின் இரகசியத் தன்மை தொடர்பில் பிரச்சினை ஒன்று எழக்கூடும் என்பது தொடர்பிலும் தேவையான அறிக்கை நடவடிக்கைகளுக்காக மேற்படி தரவுகளை நிறுவனத்திற்குப் பெற்றுக் கொள்ள முடியாமை என்பது தொடர்பிலும் அவதானிக்கப்பட்டது.

3.1.3 எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் (ழுரவஉழஅந) பெற்றுக் கொள்ளாமை

2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வு ஒன்றாக களுகங்கை முகத்துவாரத்தின் வாயினை விரிவுபடுத்தியதன் காரணமாக களுத்துறையினைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் கடலரிப்பு பாரிய பிரச்சினை ஒன்றாக மாறியமையினால் மேற்படி

கடலரிப்பினை நிறுத்துவதற்கான தீர்வு ஒன்றாக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 வரை ஷரூ.மி. 189 தொகை செலவிடப்பட்டு 19 கருத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்று கிடைக்கப் பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.1.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 2.∴2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும் எனினும், திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட வரைவு செயலாற்றுகை அறிக்கையின் அத்தியாயம் 3 மற்றும் 7 இன் பிரகாரம் ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கை என்பன உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

3.2 சொத்து முகாமைத்துவம்

(அ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு உள்ள பெறுமதி ஷரூ. 11.9 மில்லியன் தொகையாகிய ஏழடஎழ நுஒஉயளயவழச வண்டி பல ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாமல் காலி அலுவலக வளாகத்தில் உக்கிய நிலையில் காணப்பட்டதுடன் 2021 நவெம்பர் 16 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் ஒப்படைக்கப்படு இருந்த ஷரூ. 5,800,000 தொகை பெறுமதியுடைய ீனு - 1046 ஆம் இலக்க வுழுலுழுவுயு ர்ஐடுருஓ டபல் கெப் வாகனத்தின் உரித்தினை ஒப்படைப்பதற்கு அல்லது மேற்படி வாகனத்தினை திணைக்களத்திற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) மொரட்டுவைப் பிராந்திய அலுவலகத்தில் ர்லரனெயை 320டுஊ - 9 உசயறடநச நுஒஉயளயவழச இயந்திரம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது நிறுத்தி வைத்திருந்தமையின் காரணமாக ஓட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தது எனினும் இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனம் கோரப்பட்டு இருக்கவில்லை.

3.3 முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் கொடுக்கல்வாங்கல்கள்

(அ) மொரட்டுவை லூனாவ ரிவெட்மெண்ட் கருத்திட்டத்திற்காக 20 டொன் மற்றும் 12 டொன் வீதமுள்ள 02 எஸ்கெவேட்டர் இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனரினால் 12 டொன் இயந்திரம் ஒன்று மாத்திரம் வழங்கப்பட்டு இருந்தது எனினும், 20 டொன் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது எனக் கருதி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2021 ஒக்டோபர் முதல் 2022 ஏப்ரல் வரை 06 மாத காலப் பகுதிக்காக 265.85 இயந்திர மணித்தியாலங்களுக்காக இயந்திர மணித்தியாலம் ஒன்றிற்கு ஷரூ. 5,000 செலுத்தி இருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய வாடகை ஷரூ. 3,700 தொகை ஆகையினால் இயந்திர மணித்தியாலம் ஒன்றிற்கு ஷரூ. 1,300 தொகை வீதம் நூற்றிற்கு 8 பெறுமதி சேர்க்கப்பட்ட வரியுடன் ஷரூ. 373,253 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டு உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொரட்டுவைப் பிராந்திய அலுவலகத்தில் செயலிழந்த நிலையில் காணப்படும் ஹிதாச்சி 330 □ 70433 எஸ்கெவேட்டர் இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்காக 2022 சனவரி மாதம் கோரப்பட்ட விலை மனுக்களுக்கு அமைய மார்ச் மாதம் தெரிவு செய்யப்பட்ட ஷரூ. 1,007,000 தொகை விலை மனுக்களை முன்வைத்த வழங்குனர் அதற்காக ஷரூ. 1,414,300 தொகை அவசியம் என அறிவித்து இருந்தமையினால் அதனை நிராகரித்து இரண்டாவது ஆகக் குறைந்த விலையாகிய ஷரூ. 1,039,000 தொகையினை முன்வைத்த வழங்குனரினைத் தெரிவுசெய்து

கொள்ள வேண்டும் எனினும், அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஏப்ரல் மாதத்தின் 02 நாட்களில் முதலில் விலை மனுக்களை முன்வைத்த மற்றைய வழங்குனர்கள் இருவரிடமும் இருந்து வெவ்வேறாக மீண்டும் ஒரு முறை விலை மனுக்களைப் பெற்றுக் கொண்டு முதலாவது வழங்குனருக்கு ஷரூ. 1,414,300 தொகைக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டு இருந்தது.

(இ) கரையோர வலயங்களில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புக்களுக்காக நிகழ்நிலை முறையின் ஊடாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக ஷரூ. 5,000,000 தொகைக்கு முறைமை ஒன்றினைத் தயாரித்துக் கொள்வதற்காக 2016 யூன் 09 ஆம் திகதி இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டு இருந்த போதிலும், பின்னர் மேற்படி நிறுவனத்தினால் மேற்படி பணியினை ஷரூ. 14,528,000 தொகைக்கு தனியார் தரப்பினர் ஒருவரிடம் ஒப்படைத்தமையின் அடிப்படையில் ஷரூ. 9,528,000 தொகையினை மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

3.3 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மொரட்டுவை லூனாவ கடற் கரையோரத்தில் கரையோர அரிப்பினைத் தடுப்பதற்காக 410 மீற்றர் நீளத்தில் நிர்மாணிக்கப்படும் ரிவெட்மெண்ட் அணைக்கட்டிற்காக ஷரூ. 11,960,100 தொகைக்கு 2021 ஏப்பிறல் 25 ஆம் திகதியன்று முதலில் தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட வழங்குனர் பொருட்கள் வழங்குவதனை நிறுத்தி வைத்தமை காரணமாக ஷரூ.மி. 17 தொகைக்கு மீண்டும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் முதல் பெறுகையின் மூலம் வழங்கப்படாத 4,549 கற்பாறைகளைப் பெற்றுக் கொள்ளும் போது திணைக்களத்திற்கு ஷரூ. 1,742,267 தொகை நட்டம் ஒன்று ஏற்பட்டு உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொரட்டுவைப் பிராந்திய அலுவலகத்தில் காணப்படும் 2017 ஆம் ஆண்டில் ஷரூ. 28,850,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு 2022 மே மாதம் தொடக்கம் செயலிழந்த நிலையில் காணப்படும் ஹிதாச்சி 330 வகை எஸ்கெவேட்டர் இயந்திரத்திற்காக ஷரூ. 1,542,606 தொகையினையும், ஹிதாச்சி 330 -70433 எஸ்கெவேட்டர் இயந்திரம் மற்றும் ர்லரனெயை □ 320 எஸ்கெவேட்டர் இயந்திரத்திற்காக ஷரூ. 1,641,291 தொகையினையும் செலுத்தி பழுது பார்க்கப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியாகும் போதும் மேற்படி 03 இயந்திரங்களும் செயலிழந்த நிலையிலேயே இருந்ததுடன் கருத்திட்டங்களுக்கு அவசியமான இயந்திரங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டு இருந்தன. மேலும், ஹிதாச்சி 330 வகையான எஸ்கெவேட்டர் இயந்திரத்திற்காக எரிபொருள் தகனம் தொடர்பான பரீட்சிப்பு ஒன்றினை மேற்கொள்ளாது மணித்தியாலம் ஒன்றிற்கு 24 லீற்றர் எரிபொருள் தகனமடைவதாக இயந்திர மணித்தியாலம் 4500 இற்காக எரிபொருள் சமப்படுத்தப்பட்டு இருந்தது.

(இ) உக்கலடைந்து வந்த மொரட்டுவை பிராந்திய அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ள ர்லரனெயை □ 320 எஸ்கெவேட்டர் இயந்திரத்தை 2022 நவெம்பர் 15 ஆம் திகதி களுத்துறை வேலைத்தளத்தில் இருந்த மொரட்டுவை அலுவலகத்திற்கு கிட்டத்தட்ட 25 கிலோ மீற்றர் தூரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அதனைச் சுற்றியுள்ள நிறுவனங்களிலிருந்து விலை மனுக்களைப் பெற்றுக்கொள்ளாது கிட்டத்தட்ட 50 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வெலிவேரிய, சியம்பலாபே மற்றும் ஹெய்யந்துடுவ ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள 03 நிறுவனங்களில் இருந்து விலை மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தமையின் காரணமாக அதற்காக ஷரூ. 100,000 தொகையினைச் செலவழிக்க வேண்டி இருந்தது.

(ஈ) களுத்துறைக் கெலிடோ கரையோர அரிப்பு மற்றும் அதற்கு அருகில் உள்ள வீதியில் மணல் நிறைதல் என்பவற்றினைத் தடுப்பதற்காக ரிவெட்மெண்ட் அணைக்கட்டு ஒன்றினை நிர்மாணிப்பதற்குத் தேவையான 20 டொன் எஸ்கெவேட்டர் இயந்திரம் ஒன்றின் மூலம் 650 இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் 01 கியூப் லோடர் இயந்திரம் ஒன்றின் மூலம் 30 மணித்தியால சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட வழங்குனர்களுக்கு முறையே 213.5 மணித்தியாலங்களுக்காக ஷரூ. 1,184,925 தொகையும் மற்றும் 49.3 மணித்தியாலங்களுக்காக ஷரூ. 322,915 தொகையும் செலுத்தப்பட்டு இருந்த போதிலும் அதற்கு உரிய வகையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் வேலைத்தளத்தின் நடவடிக்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக மேற்படி பணிகளுக்கு இடைநடுவில் உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் வழங்குனர்கள் வேலைத்தளத்தில் இருந்து இயந்திரங்களை அகற்றிக் கொண்டு இருந்தனர். அதற்கு அமைய வேலைத் தளத்தின் எஞ்சியுள்ள வேலைக்காக 2023 ஆம் ஆண்டில் ஷரூ. 39,724,498 தொகைக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஷரூ. 1,814,790 தொகையினை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்படுகின்றது எனவும், மீண்டும் விலைமனு கோருவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட எஸ்கெவேட்டர் இயந்திரம் அடிக்கடி செயலிழப்பதன் காரணமாக ஏனைய இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாமையின் அடிப்படையில் 2023 யூலை முதல் ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரையான செயலிழந்த காலம் வரைக்கும் கூட ஷரூ. 1,756 ,280 தொகை ஒன்றினை செலுத்த வேண்டி ஏற்படுகின்றது எனவும், உரிய மேற்பார்வையின்றி மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் இறுதியாகும் போதும் கூட வேலைத்தள நடவடிக்கைகள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன எனவும் அவதானிக்கப்பட்டது.

3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) ஹம்பாந்தோட்டை, சிலாபம், நீர்கொழும்பு, மாத்தறை மற்றும் மொரட்டுவை ஆகிய பிராந்திய அலுவலகங்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட அத்துமீறிய நிர்மாணிப்புக்களுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டு இருந்த 1064 உடைத்து அகற்றும் கட்டளைகளுள் 787 எனும் நூற்றிற்கு 74 வீதத்திற்கான உடைத்து அகற்றுதல் அல்லது வேறு மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அவ்வாறு உடைத்து அகற்றும் கட்டளைகள் வழங்கப்பட்டு இருந்த 05 நிர்மாணிப்புக்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தன. மேற்படி உடைத்து அகற்றுதல்களுக்காக திணைக்களத்தினால் செலவழிக்கப்பட்டு இருந்த ஷரூ. 3,601,256 தொகையில் ஷரூ. 3,029,030 தொகையினை உரிய தரப்பினர்களிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் இயலாமல் சென்றிருந்தது.

(ஆ) ஒரு தொழிநுட்ப உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டு உள்ள திணைக்களத்தின் இயந்திரவியல் பொறியியலாளர் வேலைத்தளம் செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

(இ) தெஹிவளை மற்றும் கல்கிஸ்ஸ கரையோர வலயத்தில் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாது அத்துமீறிய வகையில் நிர்மாணித்துப் பேணி வரப்படும் 20 உணவகங்களுள் ஒரு உணவகம் தொடர்பில் திணைக்களத்தின் கவனம் கோரப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் பொலிஸில் முறைப்பாடு செய்யாமல் உடைத்து அகற்றும் கட்டளை வழங்கப்பட்டு இருந்த 15 உணவகங்கள் தொடர்ச்சியாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தன. மேலும் ஐந்து உணவகங்களுக்காக உடைத்து அகற்றும் கட்டளைகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. ஆரம்ப கட்டத்திலேயே

அடையாளம் கண்டு சட்ட ரீதியாக அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்காமையினால் திணைக்களத்தினால் விதிக்கப்படும் உடைத்து அகற்றும் கட்டளைகள் பெயரளவிலான கட்டளை ஒன்றாக மாத்திரம் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2015 முதல் 2023 வரை உடைத்து அகற்றும் கட்டளைகள் வழங்கப்பட்டு இருந்த அத்துமீறிய நிர்மாணிப்புக்களுக்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டி இருந்த ஷரூ. 3,853,006 தொகையில் நூற்றிற்கு 85 ஆகிய ஷரூ. 3,280,780 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) நீர்கொழும்பு அலுவலகத்தின் ஊடாக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் நிராகரிக்கப்பட்டதாக முறைமையில் குறிப்பிடப்பட்டு இருந்த 100 விண்ணப்பங்களுள் 53 விண்ணப்பங்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் எதிர்ப்பு ஏதும் இல்லையெனக் குறிப்பிடப்பட்ட கடிதங்கள் என்பவற்றை வழங்குவதற்கு உரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் ஒரே விண்ணப்பத்திற்காக பல முன்னளிப்பு இலக்கங்களின் கீழ் நிராகரிக்கப்பட்டமை அல்லது அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமை தொடர்பில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

4. நிலையான அபிவிருத்தி

4.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

காலநிலை சார்ந்த கரையோர அனர்த்தங்களைத் தடுத்தல் மற்றும் கரையோரச் சுற்றாடல் கட்டமைப்புக்களை நிலையான வகையில் பாதுகாத்தல் ஆகிய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு முகாமை செய்வதன் ஊடாக மணல் மேடுகள், கண்டல் மற்றும் உப்புச் சகதி நிலங்கள் மற்றும் கூருணர்வான சுற்றாடல் கட்டமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 70 ஹெக்ரயார் அளவினைப் பாதுகாத்தல் எனும் இலக்குப் பணியில் முன்னேற்றம் ஒன்று காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

5. மனித வள முகாமைத்துவம்

5.1 இணைக்கப்பட்டு உள்ள பதவியணி, உண்மையான பதவியணி

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று திணைக்களத்தின் 541 ஆகக் காணப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 126 பதவிகள் வெற்றிடமாக உள்ளதுடன் இவற்றுள் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம் சார்) பதவிகள் 06 உட்பட சிரேஷ்ட மட்டத்திலான 14 பதவிகளும், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களுக்குரிய 53 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்திலான 59 பதவிகளும் உள்ளடக்கப்பட்டு உள்ளன. மேலும், அனுமதிக்கப்பட்ட 90 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் காணப்பட்ட போதிலும், உண்மையான எண்ணிக்கை 110 ஆகக் காணப்பட்டமையால் 20 மேலதிகமாகவும் காணப்பட்டன. அதற்கு அமைய உண்மையான வகையில் நிலவும் பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடமை நடவடிக்கைகளைப் பேணி வரும் ஆற்றல் தொடர்பில் மீளாய்வு செய்து தேவைப்பாட்டிற்கு அமைய திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ஆர்.எம்.எம்.எஸ். பெரேரா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்.

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக உண்மையான வெளியீடு		
	100% -90%	75% - 89%	50% -74%
வினைத்திறனாக பாதுகாக்கப்பட்ட கடற்கரையின் நீளம		-	43%
ஊட்டமளிக்கப்பட்ட மணல் கொண்ட வினைத்திறனான கரையோரங்களின் நீளம்			0%
தூய்மையான கடற்கரையின் நீளம்	100%		
பாதுகாக்கப்பட்ட உணர்திறன் பகுதி			0%
சதுப்பு நிலபடுக்கையின் மறுசீரமைப்பு	100%	-	
8.0 க்கு மேற்பட்ட, வருடாந்த சராசரி கரையோர நீரின் கார மட்டத்தின் பரிசோதனை	100%		
வழங்கப்பட்ட இலத்திரனியல் அனுமதிப்பத்திரம்	100%	-	
சுற்றுச்சசூழல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்	100%		

அத்தியாயம் 05

முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலைபேறான இலக்குகளின் முன்னேற்ற அறிக்கை

5.1 அடையாளம் காணப்பட்ட சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

நிறுவன நோக்கத்துக்கு அமைய இலக்கு	நடவடிக்கை	வெற்றி பற்றிய குறிகாட்டி	2023 இலக்கு	2023 முன்னேற்றம்	% 0 - 49	% 50 - 74	% 75 - 100	SDG கட்டமைப்புக்குள் வழங்கப்பட்டுள்ள தொடர்பான கொள்கையின் இலக்கு
இலக்கு - 13 காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்தல்								
1. காலநிலை தொடர்பான கடலோர பேரழிவுகளின் பாதகமான விளைவகளைத் தடுத்தல் மற்றும் கணிசமாக குறைத்தல்.	1.1. கரையோர பாதுகாப்பு கட்டமைப்பு நிர்மாணம்	அ. பயனுள்ள பாதுகாப்பான கரையோர நீளம்	3500m	1502m	43			13.1 சகல நாடுகளின் காலநிலை தொடர்பான ஆபத்துக்கள் மற்றும், யற்கை பேரழிவுகளை தாங்கும் திறன் மற்றும் மாற்றியமைக்கும் திறனை வலுப்படுத்தல்.
	1.2. செயற்கை மணல் ஊட்டல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்.	ஆ. செயற்கை மணல் ஊட்டம் கடற்கரை நீளத்தை உறுதிப்படுத்தியது.	0	0	0			
	1.3. சதுப்பு நிலப் பகுதிகளின் புனரமைப்பு	ஈ. செய்கையிடப்பட்ட அளவு	1000m2	2770m2			100	
இலக்கு 14. நிலைபேறான அபிவிருத்திக்கு சமுத்திரம் மற்றும் சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் உறுதியான பயன்பாடு.								
2. கடல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் மற்றும் பல்வேறு, டங்களில் நீரின் தர அளவுருக்கள் (ph) குறித்த தரவுகளின் அளவீடு மற்றும் பரிமாற்றம்.	2.1. கரையோரம் சுத்தம் செய்யும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தல்.	ஈ. சுத்தம் செய்யப்பட்ட ஒட்டுமொத்த கடற்கரை நீளம்.	2km	25.5km			100	14.1 2025ஆம் ஆண்டின்போது சமுத்திர குப்பைகள் மற்றும் ஊட்டச்சத்து மாசுபாடு உட்பட, முக்கியமாக நில அடிப்படையிலான செயற்பாடுகளிலிருந்து, அனைத்து வகையான கடல் மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தளவு குறைவு.

நிறுவன நோக்கத்துக்கு அமைய இலக்கு	நடவடிக்கை	வெற்றி பற்றிய குறிகாட்டி	2023 இலக்கு	2023 முன்னேற்றம்	% 0 - 49	% 50 - 74	% 75 - 100	SDG கட்டமைப்புக்குள் வழங்கப்பட்டுள்ள தொடர்பான கொள்கையின் இலக்கு
	2.2. கரையோர நீரின் தர அளவுருக்களின் அளவீடு.	உ. 2026 வரை சாதாரண வருடாந்த கரையோர நீரின் pH அளவு 8.0 க்கு மேல் உள்ளதா என்பதை பரிசீலனை செய்தல்.	04 அளவுருக்கள் மற்றும் தரவு பரிமாற்றம்	04 படங்களில் அளவுருக்கள் அளவிடல் மற்றும் தரவு மாற்றம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.			100	14.3 சகல மட்டங்களிலும் மேம்படுத்தப்பட்ட விஞ்ஞான ரீதியிலான ஒத்துழைப்பு உட்பட கடல் அமிலத் தன்மையின் விளைவுகளைக் குறைத்தல் மற்றும் அவற்றின் தீர்வுகளைக் கண்டறிதல்.
3. ஆரோக்கிய வளம் மற்றும் உற்பத்தி திறனை பெற்றுக் கொள்வதற்கு அவற்றை புனரமைப்பு செய்வது உட்பட குறிப்பிடத்தக்க மனித தாக்கங்களைத் தடுப்பது மற்றும் கரையோர சூழல் தொகுதி நிலைபேறாக அபிவிருத்தி செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.	3.1. பாதகமான நிலைக்கு உள்ளான பிரதேசங்களை, னம் கண்டு முகாமைத்துவம் செய்தல்	அ. மணல் திட்டுக்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்கள் மற்றும் உணர்திறன் சுற்றுச் சூழல் அமைப்புகளை பாதுகாத்தல்.	70 Hec	0	0			14.5 2020 ஆம் ஆண்டுக்குள்இ தேசிய மற்றும் சர்வதேச சட்டத்திற்கு இணங்கஇ சிறந்த அறிவியல் தகவல்களின் அடிப்படையில் குறைந்தது 10 சதவீத கடலோர மற்றும் கடல் பகுதிகளைப் பாதுகாக்கவும்.

5.2 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்குகளில் வெற்றி மற்றும் சவால்களை சுருக்கமாக குறிப்பிடவும்.

அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இயன்றவரை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இவற்றில் சில இலக்குகளை தரப்பனரான தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட	43	28	15
மூன்றாம் நிலை	4	0	4
இரண்டாம் நிலை	322	274	48
ஆரம்ப நிலை	172	112	60

06.2 ** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

01) ஊழியர் பற்றாக்குறை நிலவும்போது நிறுவனத்தின் செயலாற்றுகை எதிர்மறையாக மாறும். 02) பணிகளின் வினைத்திறன் குறைவடைவதனால் அந்த பெறுபேறுகள் கிடைக்கும். அலுவலகமொன்றில் அதிகப்படியான ஊழியர்கள் உள்ளமையானது அலுவலகத்தின் நிதிச் செயலாற்றுகையினைக் குறைப்பதற்கு காரணமாய் அமையும். பதவியணிக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் பதவியணியின் வினைத்திறன் மற்றும் நேர்மறையான மனப்பாங்குகள் உருவாகும். அதன் காரணமாக நிறுவனத்தின் செயலாற்றுகை அதிகரிக்கும்.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூ. 1000)		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு)	பெற்றுக் கொண்ட அறிவு *
			உள்நாட்டு	வெளிநாட்டு		
100 மணி நேர தமிழ் பயிற்சி	28	2022.12.15 - 2023.06.16	25		உள்ளூர்	-
கோப்பு மேலாண்மை	40	2023.06.28 ஒரு நாள்	10.27		உள்ளூர்	-

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

- பல்வேறு துறைகளின் புதுப்பித்த அறிவின் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- பயிற்சி திட்டங்கள் மூலம் அணுகுமுறைகள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் கூட்டு பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- ஊழியர்களின் சேவைத் தேவைகளை அடையாளம் காணுவதன் ஊடு அவர்களின் உற்பத்தி நிலையை அடைய உதவுதல்.
- புதுமையான மற்றும் திறமையான அலுவலக அமைப்புகள் மூலம் பணியாளர்களை ஊக்குவித்தல்.

அத்தியாயம் 07

ணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	ஏற்புடையதல்ல		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.6	Vida	ஏற்புடையதல்ல		
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் (நி.பி. 445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்தக் கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேறிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமற்றது	ஏனெனில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தகவல்களை சேகரிக்க நேரம் எடுக்கும்.	சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டது
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) னுஆயு/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமற்றது	ஒவ்வொரு பிரதேச அலுவலகம் ஊடாகவும் தகவல்களைச் சேகரிக்க நீண்ட காலம் செல்கிறது.	சரிசெய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு ஏற்ப, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன் படி, கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.3	வாகன பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் படி, நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமற்றது	போதிய எரிபொருள் செலவு இல்லாததால் செய்ய முடியவில்லை	இது 2024 ஆம் ஆண்டில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வந்த செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
10	வங்கிக் கணக்குகளின் முகாமை			
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படி செயற்பட்டு ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
11	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமற்றது	1101 பட்ஜெட் பாடத்திற்கு 2023 ஆம் ஆண்டில் போதிய ஒதுக்கீடு வழங்கப்படவில்லை	2024 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் மேலாண்மை
12	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		
13	பொது வைப்புக் கணக்கு			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	முன்பணக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமற்றது	அது தாமதமானது	சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டது
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேறி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	ஏற்புடையதல்ல		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	ஏற்புடையதல்ல		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	ஏற்புடையதல்ல		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட் எம்எஸ்டீ சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரியொருவரை நியமித்து தகவல் வழங்கும் பதிவொன்றைப் புதுப்பித்துப் பராமரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைதளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள்.:. குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒருமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05.:.2008 மற்றும் 05.:.2008 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல், செயற்படுத்தல் பணிகளைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுப் பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		